கணபதி துணை.

கவுசிகர் அருளிச்செய்த

கவுசிகர் மையும்,

குலசேகரப்பெருமாள்

அருளிச்செய்த

பெருமாள்திருமொழியும்

C. P. [illegible] ராலும்,

P. V. கண்ணையா அய்யாவு [illegible] ராலும்

வெளியிடப்பட்டன.

சென்னை இராயப்பேட்டை

உமாபதி குருப்பிரகாசம் பிரஸ்.

விலை அ. 6.

உ

கணபதி துணை.

கவுசிகர் அருளிச்செய்த

கவுசிகர் மையும்,

குலசேகரப்பெருமாள்

அருளிச்செய்த

பெருமாள் திருமொழியும்

இவை

C. P. நாராயணசாமி முதலியாராலும்,

P. V. கண்ணன் அண்டு கம்பெனியாராலும்

வெளியிடப்பட்டன.

சென்னை இராயப்பேட்டை

உமாபதி நருப்பிரகாசம் பிரஸ்.

1910.

விலை பை - 6.



கவுசிக மகாமுனிவர்.

உ

கணபதி துணை

கவுசிகர் மைம.

---

*விநாயகர் காப்பு.

வெண்பா.

சந்திர சேகரனுஞ் சாம்ப சதாசிவனின்
மைந்தன் கணபதியை வந்தித்தே—யிந்தக்
கவுசிகர் மய்யிதனைக் கைம்முறையாக கொள்
பவநோய்கள் யாவும் பறக்கும். [ளின்

அகவல்.

கற்பித்த கடுக்காய்
கடுகிந் துப்பு
நற்பெருங் காயம்
நல்லவெண் காரம்

---

* இக்காப்பு இந்நூல் சோதனாசிரியரால் செய்யப் பட்டது.

மெய்ப்புள சூத
மேவு மனோசீலை
திப்பிலி தாரஞ்
சீரகத் துடனே
ஒப்புடன் கடுகு
ரோகணி நாபி
அப்படி மருந்தது
பணி ரண்டு
இப்படி வான
மிதுசம னிடையாய்
உற்பன நஞ்சி
னுயர்முளை போக்கி
கஞ்சது நீக்கி
நல்லிள வறுப்பாய்ப்
புன்சமன் சூரணம்
பொடியது செய்து
வஞ்சிதன் வேலிப்
பருத்திச்சா றோர்நாள்
கொஞ்சிய தென்னங்
கொட்டாஞ் சிக்கரி

அஞ்சுவி ராணிடை
யதுவுமே சேர்த்து
மிஞ்சிய பனைவெல்லம்
விராணிடை யஞ்சு
தேங்காய்ப் பாலுஞ்
சேர்த்தங் கரைத்து
இஞ்சிச் சாற்றி
லெடுத்துச் சிமிழில்
வைத்தனு பானம்
வரும்பிணி தனக்கு
உத்த வனுபான
முரைத்தி லாகும்
வெள்ளை யக்கர
மிகுத்தோர் தோஷம்
சில்லறை தோஷஞ்
* சினப்புக ளேழும்
கருத்த வக்கரங்
கண்டதோர் தோஷம்

* சினப்பென்பது விம்முதல், சிலந்திமுதலிய நோயினை.

பெருத்த வக்கரம்
பெரியதோர் கட்டு
மேவிய முள்ளெழு
தோஷ முறிந்திட
நாவிற் பணைவிடை
நன்றாய்த் தேய்த்துக்
கூவிய வெந்நீர்
குடித்திட தீரும்
சன்னி தோஷஞ்
சர்வ சுரங்களும்
வெந்நீ ரிற்கொள
விட்டகன் றோடும்
*கடுக்காய்ச் சாற்றிற்
காசிடை கொள்ள
இடுக்குச் சுரங்க
ளிருபதுந் தீரும்
முடுக்குக் குளிர்சுர
முற்றுந் தீர
வெடுக்கு மாஞ்சுக்கு
வெந்நீரிற் கொள்ளே

ஸ்ரீதேவி சீரகம்
வெந்நீரிற் கொள்ள
மூதேவி வெஞ்சுர
மூறிந்தோடு மென்றே
எட்டுச் சுரமு
மேலமிளகுடன்
அட்டியில் லாமல்
அகன்றுபோ மென்றே
கொன்றைக் கொழுந்துங்
கொள்கடுக் காய்ப்பொடி
எண்ணெயிற் கொள்ள
யேங்கலுப் பீசம்போம்
சன்னி யிருமல்
சத்தியுள மாந்தை
சொன்னநல் மோருடன்
சுகவூஞ்சல் பட்டை
கக்க லிருமல்
கண்டிப்பு தீரும்
இருநேரங்கொள்
வெண்ணெய் முலைப்பால்

பரிசுடன் கொள்ளப்
பறந்தே யகன்றிடும்
குட்ட நோயுங்
குவளைவிப் புருதி
இட்டமாம் பறங்கி
பட்டையி லிடறுமே
ஆடா தோடை
யரத்தையின் பாலிற்
சூடாக வெண்ணெய்
சுகம்பெறக் குடிப்பீர்
ஈளை யிருமல்
வேலங்கலுப் பீசம்
கோழை மனைக்
கட்டுவிப் புருதி
ஆளை யறிந்தங்
காவின் மோர்தனில்
வேளைக்கு விரா
னிடை. காலு
பள்ளவிப் புருதி
பதின்மூன் றுக்குங்

No 93

கொள்ளு வீதூது
பத்திரிச் சாற்றில்
உள்ளிய வுசிலையின்
பட்டையின் சாற்றில்
கொள்ளுவீர் சுவாசங்
குலைகுலைந் தோடச்
சத்தி குன்மந்
தகரைச் சாற்றில்
அஸ்தி குன்ம
மாமணக் கெண்ணெயில்
பித்த குன்மம்
புளியாரைச் சாற்றில்
வாய்வு குன்மம்
வல்லாரைச் சாற்றில்
எரிகுன் மத்துக்
கிளநீர் சீரகம்
உரியநெய் பாலி
லூத்திக் கொடுத்திடு
எரிவலி குன்மம்
விளக்கெண்ணெய் தன்னில்

கருதிய குழம்பு
காசிடை யாகும்
நலமுடன் குடிக்க
நல்லதா மென்றே
அண்ட வாதம்வெள்
ளாட்டுப்பால் வெண்ணெயில்
குண்டிகை நோவு
சூலைவலி யெரிச்சல்
தின்று வின்பால்
நெய்சேரு சர்க்கரையில்
அண்டிய குட்ட
மதுபதி னாலும்
கண்டு சர்க்கரை
காய்ச்சிய நெய்யிலும்
சூதக வாய்வு
சுக்குநீர் சீரகம்
பாலுடன் பறங்கிப்
பட்டைதூள் நெய்யில்
சூலைக ளொன்பதுஞ்
சுகமுடன் தீர

நீருள்ளி சுக்கு
மிளகுசீ ரகத்தில்
தேரிய குழம்பு
காசிடை தின்றால்
பாரியகு சிகா
வாய்வு பறந்திடும்
மூல முளைக்கு
முலைப்பா லெண்ணெயில்
காலங் கண்டு
கழுஞ்சிடத் தீரும்
மூல வாய்வு
மூவிரண் டோடப்
பாலுநெய் மோரிற்
பரிகரித் திடலாம்
இரத்த மூல
நறுநெய் யதனில்
உத்த பசும்பாலி
லோர்கழுஞ் சிடலாம்
மூலங் கிராணி
முக்குவக் கிக்குப்

பால்நெய் பண்ணிப்
பருகிடு வீரோ
சீழ்மூ லங்கள்
சிறுத்துக் கழித்தால்
செம்மறிக் கொழுப்பு
நெய்பால் சேர்த்து
களிம்பது தனிலே
கழுஞ்சிடு வீரே
மூக்குக் கடுப்பு
முளைகள் வளர்ந்திடும்
ஒக்கவே கோழி
மூத்தைகள் போலும்
தாமரைக் கண்போல்
தான்முளை விழுந்தால்
ஆமை யோடுபோ
லதுமுனை கரையக்
கண்டுசீ லைப்புகை
காட்டத் தீரும்
தண்டு தனிலே
தாமரைச் சிலந்தி

பண்டு சிலந்தி
பவுத்திர ரோகம்
கண்ட மாலை
கழுக்கட்டுக் கழலை
தொண்டைச் சிலந்தி
தொப்புட் கழலை
அண்டி மார்பி
லாணிச் சிலந்தி
பெண்டுகள் முலைக்குத்துப்
பேர்முது குப்பிளவை
மூலங்க ளேழு
முறிந்தது வோடும்
சீலைப் புகையின்
திரியது பிடிக்க
அரையாப்பு வாழை
யதுசிலந் திகளும்
பச்சைப்புண் கொடியப்
பாதசக் கரமும்
படுவன் சிலந்தி
பலபல புண்கள்

ஏது சிலந்திக
எண்பத்து நாலும்
மதுபுகை பிடிக்க
வாங்கு மென்று
மூக்குநீர்ப் பாச்சல்
முகவாத மோடு
நாக்குச் சலங்கள்
நல்லபல் லரணை
நோக்கிடும் பற்குத்து
மண்டை *விப்புருதி
மாதவ ஞன்கு
மண்டைப் பீனிசம்
கபால விப்புருதி
கன்னக் கிரந்தி
முகவாத சன்னி
முறிந்துகெட் டோட
தீருமே யென்றுந்
திரிபுகை பிடிக்க

* விப்புருதி யென்பதுகட்டி, சிலந்திநோய் பல வுற்றினை.

விசைவாய்வு போல
வெகுண்டுமேல் வாய்வு
மலசல மடைத்து
வாதை மிகுந்தால்
நலம்பெற வேலிப்
பருத்தியின் சாற்றிற்
கொண்டரைக் காற்படி
கொடுத்திடக் குழம்பு
குன்றி மணியிட்டுக்
கொடுத்திடத் தீரும்
கரிய குஷ்டங்
கைகால் குறைந்தால்
கருநொச்சிச் சாற்றில்
கலந்துண்டு பூசலாம்
என்ன குஷ்ட
மியம்பிடக் கேளு
தென்ன வெல்லத்தில்
திரட்டி விழுங்கலாம்
மலமுஞ் சலமு
மறித்துநின் றதற்குத்

தலைமயிர் சுட்ட
சாம்பலிற் கொள்ளலாம்
காமாலை சோகை
கனத்த மகோதரம்
ஆமணக் கெண்ணெ
யாட்டுக்கோ மயத்தில்
பணவிடை கொடுக்கத்
திரிபலைத் தூளுந்
திறமுடன் குழைத்துத்
தின்றிடத் தீரும்
விதமுடன் குழம்பு
விரானி டையுடன்
பதனமா யுண்ணப்
பறந்துகெட் டோடும்
பாண்டு காமாலை
பன்னிரு வகையும்
ஆண் [illegible] பகலும்
[illegible]க் கெண்ணெயில்
வே[illegible]நாய்
[illegible] தூளும்

பொருந்து விடங்கள்
போகுமென் றுரைத்தார்
வலிப்பு சன்னி
மரணவா தங்கள்
சலித்தே யோடத்
தழுதாழைச் சாற்றில்
சருவ வாதஞ்
சந்துகுலே களுக்குச்
சிறுகழு தையுட
நீரி லுண்ணலாம்
எண்பது வாய்வு
மிதமுடன் தீர
அன்பு கழுதை
லத்தையின் பாலில்
தென்புட னுண்ணத்
தீர்ந்திடு முடனே
சன்னி நோய்கள்
சார்பதின் மூன்று
இஞ்சிச் சாறு
மிதமுள சுக்குநீர்

விப்புருதி நான்கு
முனைகுலைந் தோடு
முருக்கிலைச் சாற்றில்
மூன்றுநாள் கொள்ள
எருக்கிலைச் சாற்றி
லிழைத்தவர் நக்க
வெறிநரி நாய்க்கடி
மிக்க வெலிக்கடி
அறிவண்டு பூர
ஞறுகால் வண்டு
நீர்வண்டு பொன்வண்டு
பூவண்டு சிறுவண்டு
கடியொடு சில்கரிய
விஷங் களுமே
ஐயா விஷங்க
ளறுபத்து நாலும்
மைபோல் கருத்த
வழலைசெம் மூக்கன்
கொம்பேறி மூக்கன்
கொடிய விரியனும்

வம்பே செய்யு
மண்டலி புடையன்
திண்டிய் தேளிறு
பயறி னளவு
உருட்டியே கலிக்க
முள்ளுக்கு மருந்து
எருக்கிலைச் சாற்றி
விதமுடன் கொடுக்கப்
பறந்துமே விஷங்கள்
தானது வோடும்
விரிதலை நாகம்
விஷமது தீண்டில்
பரிவுடன் வேலிப்
பருத்தியின் சாற்றில்
உண்ணக் குழம்பு
மொருபய றளவு
திண்ண விஷங்கள்
தீர்ந்திடு முடனே
அண்டக் குழம்பினல்
வயறுளவு கண்டால்

நன்ருங் குழம்பில்
வறநலி கண்டால்
திட்டமாய் மோருஞ்
சிறுகிராம் பாவாரைப்
பட்டையால் தீரும்
பயப்பட வேண்டாம்
பார்தனில் முனிவன்
பயின்றதென் றுரைத்தார்
உரைமொழி கேட்டு
பாயமாய்ச் செய்த்
நாலுகால் சீவன்
நயமுள்ள மாடு
சோளப் பயிர்தின்று
சொக்கிய மாட்டுக்கு
வேலியின் சாற்றில்
விராக னிடையுடன்
சேர்த்துக் கொடுக்கத்
தீர்த்திடு முடனே
உண்மையாய்ச் சொன்ன
வுரைமொழி யதனல்

நன்மையாங் குழம்பத
ஞானு முரைத்தபடி
குருவரு ளாலே
குறியே முகுந்து
வரமிகு கவுசிக
மாமுனி வரன்றன்
கவுசிக மையைக்
கடாட்சித் தாரே.

* கவுசிகர் மை முற்றிற்று.

---

* இதனைக் கவுசிகர் குழம்பெனக் கூறு வாறுமுளர்.



ஸ்ரீராமர், லக்ஷ்மணர், சீதாபிராட்டியார்.

Blank page counted

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

குலசேகரப் பெருமா ளருளிச்செய்த

பெருமாள் திருமொழி.

10-வது அங்கணெடுமதிள்.

தில்லைநகர்த் திருச்சித்திரகூடமால் தோல் லிராமனுய் தோன்றிய கதைமுறை.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கலியாணிராகம் - ஆதிதாளம்.

அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தி யென்னும் - அணிநகரத் துலகனைத்தும் விள க்கும் சோதி, வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி - விண்முழுது முயக் கொண்ட வீரன் றன்னை, செங்கணெடுங் கரு முகிலை யிராமன் றன்னைத் - தில்லைநகர்த் திருச் சித்திர கூடந் தன்னுள், எங்கள்தனி முதல் வனையெம் பெருமான் றன்னை - யென்று கொலோ கண்குளிரக் காணு நாளே. (க)

வந்தெதிர்ந்த தாடகைத னுரத்தைக் கீறி-
வருகுருதி பொழிதரவன் கணையொன் றேவி,
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து -
வல்லரக்க ருயிருண்ட மைந்தன் காண்மின்,
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண்
சோலைத் - தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்
தன்னுள், அந்தணர்க ளொருமூவா யிரவ
ரேத்த - அணிமணியா சனத்திருந்த வம்மான்
றானே. (உ)

• செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச் -
சினவிடையோன் சிலையிறுத்து மழுவா ளேந்தி,
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு -
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் றன்னை,
தெவ்வரஞ்சு நெடும்புரிசை யுயர்ந்த பாங்கர் -
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்,
எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை யிராமன் றன்னை -
யிறைஞ்சுவா ரிணையடியே யிறைஞ்சி னேனே.

தொத்தலர்பூஞ் சுரிகுழல்கை கேசி சொல்
லால் - தொன்னகரந் துறந்து துறைக் கங்கை
தன்னை, பத்தியுடைக் குகன்கடத்த வனம்

No 93

போய்ப் புக்குப் - பரதனுக்குப் பாதுகமு
மரசு மீந்து, சித்திரகூடத்திருந்தான் றன்னை
யின்று - தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்
தன்னுள், எத்தனையும் கண்குளிரக் காணப்
பெற்ற - இருநிலத்தார்க் கிமையவர்நே ரொவ்
வார் தாமே. (௪)

வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக்
கொன்று - வண்டமிழ்மா முனிகொடுத்த வரி
வில்வாங்கி, கலைவணக்கு நோக்கரக்கி மூக்கை
நீக்கிக்-கரனோடு தூடணன்ற னுயிரை வாங்கி,
சிலைவணக்கி மான்மரிய வெய்தான் றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்,
தலைவணங்கிக் கைகூப்பி யேத்த வல்லார்-திரி
தலால் தவமுடைத்துத் தரணி தானே. (௫)

தனமருவு வைதேகி பிரிய லுற்றுத்-தளர்
வெய்திச் சடாயுவை வைகுந்தத் தேற்றி, வன
மருவு கவியரசன் காதல் கொண்டு - வாலி
யைக்கொன் றிலங்கைநக ரரக்கர் கோமான்,
சினமடங்க மாருதியால் சுடுவித் தானைத்-
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்,

இனிதமர்ந்த வம்மானை யிராமன் றன்னை -
யேத்துவா ரிணையடியே யேத்தி னேனே. ()

குரைகடலை யடலம்பால் மறுக வெய்து -
குலைகட்டி மறுகரையை யதனு லேறி, எரி
நெடுவே லரக்கரொடு மிலங்கை வேந்தன் -
இன்னுயிர்கொண் டவன்தம்பிக் கரசு மீந்து,
திருமகளோ டினிதமர்ந்த செல்வன் றன்னைத்-
தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்,
அரசமர்ந்தா னடிசூடு மரசை யல்லால் - அர
சாக வெண்ணேன்மற் றரசு தானே. (எ)

அம்பொனெடு மணிமாட வயோத்தி
யெய்தி - அரசெய்தி அகத்தியன்வாய்த் தான்
முன் கொன்றான், றன்பெருந்தொல் கதை
கேட்டு மிதிலைச் செல்வி - யுலகுய்யத் திருவ
யிறு வாய்த்தமக்கள் செம்பவளத் திரள்வாய்
தன் சரிதை கேட்டான் - தில்லைநகர்த் திருச்
சித்திர கூடந் தன்னுள், எம்பெருமான் றன்
சரிதை செவியால் கண்ணால் பருகுவோ மின்
னமுதை மதியோ மின்றே. (அ)

செறிதவச்சம் புகன்றன்னைச் சென்று கொன்று - செழுமறையோ னுயிர்மீட்டுத் தவத்தோ னீந்த, நிறைமணிப்பூ ணணியுங்கொண் டிலவ ணன்றன்னைத் - தம்பியால் வானேற்றி முனிவன் வேண்ட, திறல்விளங்கு மிலக்குமனைப் பிரிந்தான் றன்னைத் - தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள், உறைவானை மறவாத வுள்ளந் தன்னை - யுடையோமற் றுறுதுயர மடையோ மின்றே. (கூ)

[சாற்றுப் பாட்டுகள்.]

அன்றுசரா சரங்களைவை குந்தத் தேற்றி - அடலரவப் பகையேறி யசுரர்தம்மை, வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற விண்முழுது மெதிர்வரத்தன் தாம மேவி, சென்றினிது வீற்றிருந்த வம்மான் றன்னைத்- தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள், என்றும்நின்ரு னவனிவனென் றேத்தி நாளு- மிறைஞ்சுமினோ வெப்பொழுதும் தொண்டீர் நீரே. (கo)

தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்-
திறல்விளங்குமாருதியோடமர்ந்தான் றன்னை,
எல்லையில்சீர்த் தயரதன்றன் மகனாய்த்தோன்
றிற் - றதுமுதலாத் தன்னுலகம் புக்க தீறா,
கொல்லியலும் படைத்தானைக் கொற்ற வொ
ள்வாள் - கோழியர்கோன் குடைக்குலசே
கரன்சொற் செய்த, நல்லியலின் தமிழ்மாலை
பத்தும் வல்லார் - நலந்திகழ் நாரணனடிக்கீழ்
நண்ணு வாரே. (கக)

குலசேகரப்பெருமாள்
திருவடிகளே சரணம்.

WAGES CALCULATION BOOK.

A Pocket Ready Reckoner.

மாதம் 1-க்கு 8-அணு சம்பள முதல்
78-ரூபா வரையிலும்.

நாள் 1-முதல் 31-வரையிலும் சம்பளம்
அறிந்து கொள்ளலாம்.

இப்புத்தகம் ஒவ்வொருவரிடத்தும், ஒவ்வொரு கம்பெனியிலும் இருத்தல் வேண்டும். யாவருக்கும் உபயோகமானது. 8 - அணு முதல் 78 - ரூபா வரையில் உள்ள சம்பளக் கணக்கைத் தெளிவாய் விளக்கக் கூடியது.

விலை அணு **6.**

கா. ப. நாராயணசாமி முதலியார்,
42, பெருமாள்முதலி வீதி,
புதுப்பாக்கம், சென்னை.

பி. வி. கண்ணன் அண்டு கம்பெனி,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.